# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2010

# தமிழ்மொழி

## வகுப்புநிலை 3

நேரம்: 90 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

எ+கா: தமிழர் கொண்டாட்டங்களில் ஒன்று ஆடிப்பிறப்பு.
(சித்திரைப் புத்தாண்டு, ஆடிப்பிறப்பு, தீபாவளி)

1. தமிழர் தங்கள் ______________________ போராட வேண்டும்.
(பணத்துக்காகப், உறவினருக்காகப், உரிமைகளுக்காகப்)

2. நல்வழி என்ற நூலை எழுதியவர் ______________________
(சோமசுந்தரம், ஔவையார், சின்னத்தம்பி)

3. நீ தமிழ்மொழி படிக்கின்றாய். நீங்கள் தமிழ்மொழி ______________
(படி, படிக்கின்றோம், படிக்கின்றீர்கள்)

4. திருக்குறளைப் ______________________ என்றும் கூறுவர்.
(நான்மறை, பொதுமறை, மறைநூல் )

5. சோமசுந்தரப்புலவர் எழுதிய பாடல்களில் ஒன்று ______________
(பவளக்கொடி, ஆத்திசூடி, பொன்பூச்சொரியும்)

6. மார்க்கோனி ______________________ கண்டுபிடித்தார்.
(தொலைபேசியைக், வானொலியைக், விண்ணூந்தைக்)

7. கற்றதற்கு அழகு ______________________ பேசுதல்.
(பிழையின்றிப், பிழையுடன், விரும்பியபடி)

8. இலங்கையில் தமிழர் வாழும் முக்கிய நகரங்களில் ஒன்று

______________________

(காலி, கொழும்பு, யாழ்ப்பாணம்)

9. புகழ் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் ________________________

(அகழ், நிகழ், இகழ்)

10. 500 என்பதை எழுத்தில் எழுதினால் ________________________

(ஐந்துநூறு, ஐந்நூறு, ஐநூறு)

11. ஒன்று பட்டால் உண்டு ________________________.

(வால்வு, வாள்வு, வாழ்வு)

12. 'பொன் பூச் சொரியும்' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்

________________________.

(சின்னத்தம்பிப்புலவர், இளங்கோஅடிகள், சோமசுந்தரப்புலவர்)

13. எழிலி தன் வேலைகளை __________ என்று செய்து முடித்தாள் .

(மடமட, கலகல, மளமள )

14. சிறுவன் புதியவரை ________________________ பார்த்தான்.

(அக்கம்பக்கத்தில், ஏற இறங்கப், ஊன்உறக்கமின்றிப்)

15. கூத்து ________________________ அடங்கும் ஒரு கலைவடிவம்.

(நாடகத்தினுள், பாட்டினுள், இசையினுள்)

16. மக்களின் எளிய வாழ்க்கை முறையை ________________________ பாடல்கள் காட்டுகின்றன.

(சினிமா, நாட்டார், வாழ்த்து)

17. லூவரில் புகழ்பெற்ற ________________________ உள்ளன.

(சிற்பங்கள், தோற்கருவிகள், ஓவியங்கள்)

18. தமிழர் வாழ்வில் ______________ நாள் ஒரு சிறந்த நாளாகும்.

(தை முதலாம், சித்திரை முதலாம், சனவரி முதலாம்)

19. இலங்கையில் அடங்காப்பற்று என அழைக்கப்படும் இடம் ____________________. (காலி, கண்டி, வன்னி)

20. வ. உ. சிதம்பரனார் ____________________ எதிர்த்துப் போராடினார். (சிங்களர்களை, ஆங்கிலேயரை, அமெரிக்கரை)

(புள்ளிகள் 20)

## 2) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க.

எ+கா: பொய் சொல்லாது இருக்க வேண்டுமென்று திருக்குறள் __கூறுகின்றது__.

1. பண்டாரவன்னியன் போர்த்துக்கேயரை எதிர்த்துப் ____________________

2. ஔவையார் அதியமானின் உயர்ந்த குணத்தைப் ____________________.

3. நரி பாட்டியின் உணவைப் பறித்துத் தின்ன ____________________.

4. தைப்பொங்கல் திருநாள் தமிழர்களால் ____________________.

5. நான் கோடை விடுமுறைக்கு இத்தாலிக்குச் சுற்றுலாச் ____________________.

(புள்ளிகள் 10)

**3) பார்த்து, உறுப்பமைய எழுதுக.**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.

---

ஒழுக்கம் உயர்வைத் தரும்.

---

(புள்ளிகள் 05)

**4) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

எ+கா: பாராட்டினார் / உயர்ந்த / அதியமானின் / குணத்தைப் / ஔவையார்
ஔவையார் அதியமானின் உயர்ந்த குணத்தைப் பாராட்டினார்.

1. கடற்கரையில் / கட்டுவோம் / நாங்கள் / மணல்வீடு

---

2. அறிஞர் / பாராட்டினார் / சிறுவனைப்

---

3. விருந்தோம்பல் / பண்பு / ஒரு / சிறந்த

---

4. பேசி / தமிழில் / மகிழ்வோம் / நாம்

---

5. நாட்டுப்புற / பாடப்படுகின்றன / நாட்டார்பாடல்கள் / மக்களால்

---

(புள்ளிகள் 10)

5) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| ஓடியாடி | கடகட | நினைத்துநினைத்து |
| கதறிக்கதறி | ~~சிலுசிலு~~ | கைகொடுப்போம் |

எ+கா: குளிர்காற்று அடித்ததால் ___சிலுசிலு___ என்று இருந்தது.

1. கற்பாதையில் மாட்டுவண்டி ______________ எனச் சென்றது.
2. நாம் போரினால் பாதிக்கப்பட்டோருக்குக் ______________.
3. குழந்தையை இழந்த தாய் ______________ அழுதாள்.
4. சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் ______________ விளையாடினார்கள்.
5. நண்பன் சொன்ன நகைச்சுவைக் கதையை ______________ மாறன் சிரித்தான்.

(புள்ளிகள் 05)

6) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்ல | கற்க | நிறைந்து | கண்டு | வந்த | ~~கேட்க~~ |

எ+கா:
நாம் மூத்தோர் சொல்வதைக் ___கேட்க___ வேண்டும்.

1. நாம் கற்பதை பிழையில்லாமல் ______________ வேண்டும்.
2. முகிலன் வீட்டுக்கு ______________ புதியவரை வரவேற்றான்.
3. அதியமான் ஔவையாரைக் ______________ மகிழ்ந்தான்.
4. பாட்டி ______________ கதைகள் கூறுவார்.
5. மரங்களில் காய்களும் கனிகளும் ______________ இருந்தன.

(புள்ளிகள் 05)

## 7) கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து, வினாக்களுக்கு முழு விடை தருக.

அது ஒரு பெரிய காடு. காட்டில் சேரன் தனியே நிற்கின்றான். அவனுக்கு எப்படி வீடு போய்ச் சேர்வது எனத் தெரியவில்லை. எங்கும் ஒரே இருட்டு. ஊ..ஊ.. என நரிகள் ஊளையிடுவது கேட்கின்றது. வெளவால்கள் படபட எனச் சிறகடித்துப் பறக்கின்றன. மரத்தில் ஓர் ஆந்தை. அதன் கண்கள் பெரிதாய்த் தெரிகின்றன. வட்டமான பெரிய கண்கள். அது தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதாகச் சேரனின் நினைவு. அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டு மெல்ல மெல்ல நடக்கின்றான். காலில் ஏதோ தட்டுப்படுகின்றது. கீழே பார்க்கின்றான். இருட்டாக இருந்தபடியால், அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. சிறிது குனிந்து பார்க்கின்றான். அவனது காலடியில் ஒரு பெரிய பாம்பு. "ஐயோ! பாம்பு பாம்பு" எனக் கத்தியபடி ஓட முயல்கின்றான். கட்டிலில் இருந்து தொப்பென்று கீழே விழுகின்றான்.

எ+கா: கனவு கண்ட சிறுவனின் பெயர் என்ன?

**கனவு கண்ட சிறுவனின் பெயர் சேரன்.**

1. சேரன் எங்கே நிற்கின்றான்?

____________________

2. நரி எப்படி ஊளையிடுகின்றது?

____________________

3. சேரனின் காலில் என்ன தட்டுப்பட்டது?

____________________

4. சேரனுக்கு ஏன் ஒன்றுமே தெரியவில்லை?

____________________

5. சேரன் எதிலிருந்து கீழே விழுந்தான்?

____________________

(புள்ளிகள் 10)

8) கட்டங்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதி, சொற்களைக் கண்டறிந்து நிரற்படுத்துக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | ய | | ம் | ஆ | ழ | ம் |
| றை | | னி | ப் | பு | ■ | து |
| | கு | அ | ■ | | ■ | வ |
| பு | | க | | ப் | பு | ர் |
| ■ | டை | | ■ | பு | ■ | ப் |
| நீ | | ம் | நெ | | டை | பு |
| ■ | உ | | ர் | ப் | பு | ■ |

| சுவைகள் | அளவுகள் |
|---|---|
| எ+கா: துவர்ப்பு | ஆழம் |
| 1. ____________ | 1. ____________ |
| 2. ____________ | 2. ____________ |
| 3. ____________ | 3. ____________ |
| 4. ____________ | 4. ____________ |
| 5. ____________ | 5. ____________ |

(புள்ளிகள் 10)


9) **தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அச்சமாக | வெய்யிலுமில்லை | ~~தேவையானது~~ |
| கிணறு | மனிதனுக்கு | அழிந்து |

இவ்வுலகில் மனிதன் உயிர்வாழ மிகத் **தேவையானது** நீர். உணவுக்கும் உடம்பின் இயக்கத்துக்கும் நீர் இன்றியமையாதது. ______________ மட்டுமல்ல, ஏனைய உயிரினங்களுக்கும் நீர் தேவை. எமக்குத் தேவையான நீரை நாம் ஆறு, குளம், ______________ போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்கின்றோம். நீர் கிடைக்காவிட்டால், நாம் உயிர் வாழ முடியாது. இதனை நினைத்துப் பார்க்கவே ______________ இருக்கின்றது. உணவின்றி உயிரினங்கள் ______________ விடும். நாம் உயிர் வாழ நீரைத் தந்து உதவுபவன் கதிரவன். கதிரவன் இல்லாவிட்டால் ______________, மழையுமில்லை.

(புள்ளிகள் 10)

10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



(புள்ளிகள் 15)